DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 133/2019

List of Witness : Lw5

Prosecution Witness : PW5

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மணிவேல் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | முருகையகவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 19/06/2026

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் வெடிக்காரன்வலசில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். எனது விவசாயம் செய்து மற்றும் கோழிப்பண்ணை வைத்துள்ளார். எனது அண்ணன் அவரது கோழிப்பண்ணையை கன்னிமுத்து என்பவருக்கு இரண்டு வருட லீசுக்கு விட்டு இருந்தார். அதில் வேலை பார்ப்பதற்காக தேனியை சேர்ந்த சின்னகருப்பன் என்பவர் சேர்ந்து இருந்தார். கடந்த 15.06.2019 ஆம் தேதி எனது குடும்பமும், எனது அண்ணன் செல்லமுத்துவின் குடும்பமும் சென்னிலைமலைக்கு காலை 10.00 மணிக்கு சென்றிருந்தோம். மறுநாள் 16.06.2019 ம் தேதி கோழிப்பண்ணை லீசுக்கு கொடுத்து இருந்த ரூபாய் 1,40,000 த்தை பீரோவில் திறந்து பார்த்த போது பணம் ரூ.1,40,000/–மும், அரை பவுன் எடையுள்ள மோதிரத்தையும் காணவில்லை. கோழிப்பண்ணையில் வேலைக்காக இருந்த எதிரி சின்னக்கருப்புச்சாமியை காணவில்லை. அதன்பிறகு சந்தேகப்பட்டு தேனிக்கு சென்று தேனி பேருந்து நிலையத்தில் எதிரியை செல்லமுத்து, சந்திரசேகர், கள்ளிமந்தையம் காவல் நிலையத்தார்கள் ஆகியோர்கள் எதிரியை பிடித்தனர். அதன்பின்பு 20.06.2019 ஆம்தேதி காவல் நிலையத்தில் எனது அண்ணன் சம்பவம் குறித்து புகார் அளித்துள்ளார். ஆஜர் எதிரி பெரியகருப்புச்சாமியை எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அவர் வரவே இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி  தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு சம்பவத்தை குறித்து நேரடியாக தெரியாது என்றாலும், எனது அண்ணன் செல்லமுத்து சம்பவத்தை பற்றி சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றாலும் சரிதான். எனது அண்ணனின் மகன் சந்திரசேகரன் மற்றும் போலீசார் எதிரியை சின்ன கருப்புச்சாமி தேடி போனதாக தகவல் சொல்லித்தான் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி சின்னகருப்புச்சாமியை போலீசார் தேனில் வைத்து கைது செய்ததாக என்னிடம் தகவல் சொன்னார் என்றால் சரிதான். எனது அண்ணனும், போலீசாரும் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:42:39 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 133/2019

List of Witness : Lw7

Prosecution Witness : PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பால்ராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கவுண்டப்ப கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :– 19/06/2026

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் வெடிக்காரன்வலசு தோட்டத்துச்சாலையில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 20.06.2019 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு மேல் அவசரக்காரன் தோட்டம், செல்லமுத்து கோழிப்பண்ணையில் நானும் எனது அண்ணன் சிவராஜ் விசாரிப்பதற்காக அங்கு சென்றோம். அங்கு இருந்த கள்ளிமந்தையம் போலீசார் செல்லமுத்து தோட்டத்தில் திருடுபோனதற்கான இடத்தை பார்வையிட்டு மேப் போட்டு கொண்டிருந்தார்கள். அதில் எங்களிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். நானும், எனது அண்ணன் சிவராஜும்சாட்சியாக கையொப்பம் செய்தோம். **பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை:**

நானும், இந்த வழக்கின் புகார்தாரரும் உறவினரா என்றால் இல்லை. நானும், செல்லமுத்துவும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்களா என்றால் இல்லை, வெவ்வேறு சமுதாயத்தை சேர்ந்தவர்கள். செல்லமுத்து எனது பக்கத்து தோட்டத்துக்காரர் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்து கொடுத்த பார்வை மகசரில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான், வரைபடம் வரைந்து இருந்தார்கள், வந்து போனதற்காக சாட்சி கையொப்பம் கேட்டார்கள்.நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். என்னிடம் எழுதப்படாத வெள்ளைத்தாளில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றாலும், செல்லமுத்து எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:42:45 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 133/2019

List of Witness : Lw8

Prosecution Witness : PW7

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மங்களசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | கருப்பண கவுண்டர் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 19/06/2026

(2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரியின் அடையாளம் குறித்து எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று மேற்குறிப்பு செய்ததன் பேரில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் குப்பாயிவலசில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ரூபாய் ஒரு லட்சம் பாலிதீன் கவரில் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ரூபாய் ஒரு லட்சம் பாலிதீன் கவரில் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 11 குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் ரூபாய் நான்காயிரத்தி நானூறு மற்றும் அரை பவுன் மோதிரம் ஆகியவற்றில் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ரூபாய் நான்காயிரத்தி நானூறு மற்றும் அரை பவுன் மோதிரம் ஆகியவற்றில் கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் ரூபாய் எட்டாயிரத்தி ஐநூறு மற்றும் Redmi cell phone ஆகியவற்றை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(ரூபாய் எட்டாயிரத்தி ஐநூறு மற்றும் Redmi cell phone ஆகியவற்றை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** கடந்த 21.06.2019 ஆம் தேதி காலை சுமார்

5.00 , 6.00 மணி இருக்கும், நானும், சண்முகவேலும் தொப்பம்பட்டியிலிருந்து எங்கள் ஊரான குப்பாயிவலசிற்கு வந்து கொண்டிருந்தபோது நல்லமங்கையம்மன்கோவில் அருகே ஆஜர் எதிரி மற்றும் அவருடன் ஒருவரும், கள்ளிமந்தையம் போலீசாரும் இருந்தனர். ஆஜர் எதிரியுடன் இருந்த மற்றொருவருர் பெயர் கருப்புச்சாமி என்று சொன்னார். மேற்படி ஆஜர் எதிரியும் அவருடன் இருந்த மற்றொருவரும் நகை பணத்தை வெடிக்காரன்வலசில் உள்ள செல்லமுத்துவின் தோட்டத்தில் இருந்து எடுத்து வந்துவிட்டார்கள் என்றும், இவர்களை நாங்கள் பிடித்துவிட்டோம் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும் என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள். அதில் நானும் சண்முகவேலும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். மோதிரம் அரை பவுன் இருக்கும், பணம் ரூ.6,500/- , ரூ.8,000/- பின்பு செல்லமுத்துவின் வீட்டில் வைத்து ஒரு லட்சத்தையும் கைப்பற்றினார்கள். அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

செல்லமுத்து எனது உறவினரா என்றால் இல்லை. நானும், செல்லமுத்துவும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 வது வரை படித்துள்ளேன். நான் எத்தனை கையெழுத்து செய்தேன் என்றால் ஒரே ஒரு கையெழுத்து செய்தேன், என்னுடைய பெயர், விலாசத்தை மட்டும் போலீசார் எழுதிக் கொண்டார்கள். கையொப்பம் மட்டும செய்து கொடுக்க சொல்லிவிட்டு போலீசார் என்னை அனுப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்து கொடுத்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் திருடு நடந்தாகவும் அதை போலீசார் பிடித்துவிட்டதாகவும், அதனால்என்னைசாட்சியாக கையொப்பம் செய்து தரும்படியாக கேட்டார்கள் நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல, எழுதியிருந்தது. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் அப்போது நான் அங்கு இல்லை என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

PRAVEENA SUBBARAYAN
Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:42:50 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026